சுருக்கம்

பள்ளிக்கல்வி – தமிழகத்தில் சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான பள்ளிகள், நிதி உதவிபெறும் அனைத்து வகையான பள்ளிகள் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள், மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிகள் – உரிய அமைப்பிடமிருந்து பள்ளிக்கட்டிட அனுமதி பெறாத பள்ளிகளின் தற்காலிகத் தொடர் அங்கீகாரம் 31.05.2020 வரை நீட்டித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (MS) துறை

அரசாணை (நிலை) எண்.79 நாள் 06.05.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், சித்திரை 23
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.167, பள்ளிக்கல்வி (MS)த் துறை, நாள் 07.08.2018.
2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க.எண்.980 /அ1/ 2019, நாள் 20.03.2019.

ஆணை

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், பள்ளிக் கட்டடங்களுக்கான வரைபடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறை/ உள்ளூர் திட்டக்குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து முறையாக அனுமதி பெற்றபின்னரே கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று அரசாணை (நிலை) எண். 270, பள்ளிக்கல்வி (எக்ஸ்.2)த்துறை, நாள். 22.10.2012ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதற்குமுன் உள்ளாட்சி அமைப்பிடமிருந்து பெற்ற பள்ளிக் கட்டடத்திற்கான அனுமதியின் அடிப்படையில் பள்ளி தொடங்க அனுமதி மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டு வந்தன. இவ்வாணைப்படி பள்ளிகளுக்கான அங்கீகாரம் வழங்கக்கோரும் கோரிக்கையினை பரிசீலனை செய்து பள்ளி கட்டிட வரைபடத்திற்கான அனுமதியினை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையிடம் பெற்று சமர்ப்பிக்குமாறு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரால் வெளியிடப்பட்ட செயல்முறையினை எதிர்த்து பல்வேறு பள்ளிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த பல்வேறு வழக்குகள் மற்றும் அதன் மீது எழுந்த மேல்முறையீட்டு வழக்குகளில் பள்ளி நிர்வாகங்களுக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2. இந்நிலையில், இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி பள்ளிகளுக்கு அங்கீகாரம் தேவை என்பதை கருதி, ஏற்கனவே உள்ளாட்சி அமைப்பிடம் பள்ளிக் கட்டட வரைபடத்திற்கு அனுமதி பெற்றதின் அடிப்படையில், அப்பள்ளிகளுக்கு "நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக் குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் கட்டட வரைபட அனுமதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்" என்ற நிபந்தனையுடன் இப்பள்ளிகளுக்கு தற்காலிக தொடர் அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில், அரசாணை (நிலை) எண்.76, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 14.06.2018ல், திட்டம் சாராப்பகுதியில் 01.01.2011க்கு முன்னர்

கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களை முறைப்படுத்த வாய்ப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.167, பள்ளிக்கல்வித் துறை, நாள் 07.08.2018—ல் முறையாக ஒப்புதல் பெறாத பள்ளிக்கட்டடங்கள் சார்பாக "நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக் குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெற்று வரன்முறைப்படுத்திக்கொள்ள வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.76, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 14.06.2018—ல் உள்ள வழிகாட்டுதலின்படி பள்ளி நிர்வாகங்கள் கட்டட வரன்முறைக்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான பள்ளிகள், நிதி உதவிபெறும் அனைத்து வகையான பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள், மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு 31.05.2019 வரை தொடர் அனுமதி/ அங்கீகாரம் வழங்கி ஆணை வழங்கப்பட்டது.

3. இந்நிலையில், கட்டட வரன்முறைக்கு விண்ணப்பிக்க வழிவகை செய்து வெளியிடப்பட்ட மேற்காணும் அரசாணை(நிலை) எண்.76, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 14.06.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.167, பள்ளிக்கல்வித் துறை, நாள் 07.08.2018—ஐ நீக்கறவு செய்ய வேண்டி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் எண்.18539/2018 மற்றும் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில் 10.12.2018 அன்று இவ்வரசாணைகளை நீக்கறவு செய்து உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. மேலும் இத்தீர்ப்பாணை பத்தி 12இல், 01.01.2011க்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடங்களில் சரிசெய்ய வேண்டிய குறைபாடு ஏதேனுமிருப்பின் அக்கட்டடங்கள் சார்பாக வரன்முறைக்கு விண்ணபதிருக்கவில்லை என்றால் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.233/2019—ல் 01.02.2019 நாளிட்ட உயர்நீதிமன்ற தீர்ப்பாணையில் மேற்குறிப்பிட்ட 10.12.2018 நாளிட்ட தீர்ப்பின் 12வது பத்திக்கு தடையாணை வழங்கப்பட்டு அத்தடையாணை தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது.

4. இதன் தொடர்ச்சியாக மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், தனது கடிதத்தில், மேற்படி நீதிப்பேராணை மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்களில் வழங்கப்பட்ட தீர்ப்பாணைகளின்படி 01.01.2011க்கு முன்னர் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களுக்கு உரிய உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்புதல் பெற்றால் போதுமானது என்ற நிலையில், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 18 (5) இன்படி அங்கீகாரம் முடிவடைந்த நிலையிலும் பள்ளியை நடத்திவருவது சட்டத்தினை மீறிய செயலாகும் என்பதாலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு மாணவ / மாணவியர்களை அனுப்ப பள்ளி அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதாலும் இவ்வகைப் பள்ளிகளில் பயின்றுவரும் பல இலட்சம் மாணவ/மாணவியரின் கல்விச் சான்று தகுதியுடையதாக இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்பதாலும் மற்றும் பள்ளி வாகனங்களின் தரச் சான்றினைப் புதுப்பிக்கவும் அங்கீகாரம் நடப்பில் இருக்கவேண்டியது அவசியமாகிறது. எனவே, பள்ளிகளுக்குத் தொடர்ந்து அங்கீகாரம் வழங்கி அவை எவ்வித சிரமமும் இன்றி செயல்படவும், முறையாக ஒப்புதல் பெறாத பள்ளிக் கட்டடங்கள் சார்பாக நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக்குழுமம் / சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பித்து ஒப்புதல் / வரன்முறைப்படுத்திக்கொள்ள நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான

பள்ளிகள், நிதி உதவி பெறும் அனைத்து வகையான பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு தொடர் அனுமதி / அங்கீகாரம், ஓராண்டிற்கு மட்டும் (31.05.2020 வரை) வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

5. பள்ளி மாணாக்கர்களின் நலனைக்கருதி மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரது கோரிக்கை அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு தற்போது முறையாக ஒப்புதல் பெறாத பள்ளிக் கட்டடங்களை சார்பாக நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக்குழுமம் / சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பித்து ஒப்புதல்/ வரன்முறைப்படுத்திக்கொள்ள நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான பள்ளிகள், நிதி உதவி பெறும் அனைத்து வகையான பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு தொடர் அனுமதி / அங்கீகாரம், ஓராண்டிற்கு மட்டும் (31.05.2020 வரை) அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை –6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை –6
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை –6
நகல்
மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை –9.
பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மைத் தனிச்செயலாளர், சென்னை –9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
06/05/19